# அம்மா வாழ்க மரியே

அம்மா வாழ்க மரியே
எங்கள் இறைவனின் தாய் நீயே
உந்தன் வரம் கேட்டு நின்றோம்
கரங்கள் தூக்கி விடுமே - எங்கள்
கரங்கள் தூக்கி விடுமே ( 2 )

**1**
தேவ மகனை நீ தாங்கிச் சுமந்தாயே
பாசத்தை என்ன சொல்லுவோம் ( 2 )
உந்தன் அன்பின் கோலத்தை பெண்மை வீரத்தை
கண்டு நாம் வியக்கின்றோம் ( 2 )
உம்மை கரம் கூப்பி வணங்குகிறோம்
கரங்கள் தூக்கி விடுமே - எங்கள்
கரங்கள் தூக்கி விடுமே

**2**
சிலுவை அடியிலே சிந்தை குலைந்தாயே
துயரம் சுமந்த தாயே ( 2 )
உந்தன் தியாகவேட்கையை மீட்பின் பங்கினை
எண்ணி நாம் வியக்;கின்றோம ( 2 )
எங்கள் சிரம்தாழ்த்தி வணங்குகின்றோம்
கரங்கள் தூக்கி விடுமே - எங்கள்
கரங்கள் தூக்கி விடுமே